1987 மார்ச் 3]

பெரியாறு-வைகை கால்வாயை நவீனப்படுத்துதல்.

40—(*வினா எண். 11250) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நடைபெறும் பெரியாறு-வைகை கால்வாயை நவீனப்படுத்தும் பணி எப்போது நிறைவு பெறும்?

(ஆ) இதற்கான மதிப்பீடு எவ்வளவு ?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பெரியாறு-வைகை பாசன மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 1988 ஏப்ரல் திங்களில் நிறைவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) முதற் கட்டப் பணிகள் ரூ. 46.40 கோடி செலவில் 1984 டிசம்பர் திங்களில் முடிவடைந்தது. இத் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள், ரூ. 56.86 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அறிக்கையினை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன் :

"இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் (சிவில்) சில துறைகள் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள்